# மகாளய அமாவாசை: நீர்நிலைகளில் முன்னோர்களுக்கு தர்ப்பணம்





1. தருமபுரி அருகே இருமத்தூர் தென்பெண்ணை ஆற்றங்கரையோரம் முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்த பொதுமக்கள். 2. ஒகேனக்கல் முதலைப் பண்ணை பகுதியில் தர்ப்பணம் செய்த பொதுமக்கள். 3. பெண்ணேஸ்வரமடம் தென்பெண்ணை ஆற்றங்கரையில் முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்து புனித நீராடிய பொதுமக்கள்.

**தருமபுரி/கிருஷ்ணகிரி, அக். 10:** மகாளயஅமாவாசையையொட்டி, தருமபுரி மாவட்டத்தில் உள்ள நீர்நிலைகள் மற்றும் கோயில்களில் முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்யும் நிகழ்வுகளில் ஏராளமானோர் பங்கேற்று வழிபாடு செய்தனர்.

தருமபுரி மாவட்டத்தில் இருமத்தூர் பகுதியில் செல்லும் தென்பெண்ணை ஆற்றங்கரையில் ஏராளமானோர் தர்ப்பணம் மற்றும் வழிபாடுகளில் ஈடுபட்டனர். இதற்கென பிரத்யேகமாக தற்காலிக பந்தல்கள் அமைக்கப்பட்டிருந்தன. இந்தாண்டு புரட்டாசி மாத சனிக்கிழமையில் அமாவாசை வந்ததால், கூடுதல் சிறப்புகளுடன் பெருமாள் கோயில்களில் வழிபட்டனர்.

**பென்னாகரத்தில்...**

தருமபுரி, கிருஷ்ணகிரி, பென்னாகரம், ஏரியூர், நாட்றாபாளையம், ஒசூர், பாலக்கோடு, காரிமங்கலம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்வதற்காக ஏராளமான பொதுமக்கள் ஒகேனக்கல் பகுதிக்கு வந்தனர். காவிரிக் கரையோரப் பகுதியான ஒகேனக்கல் முதலைப் பண்ணை பகுதியில் வேத விற்பனர்கள் மூலமாக முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்து, காவிரிக் கரையில் புனித நீராடினர்.

பின்னர், தேச நாதேஸ்வரர் உடனுறை காவேரி அம்மன், நாகர்கோயில், விநாயகர் உள்ளிட்ட கோயில்களில் தரிசனம் செய்தனர்.

கூட்ட நெரிசலைத் தடுக்கும் வகையில், 20-க்கும் மேற்பட்ட காவலர்கள், ஊர்க்காவல் படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். அமாவாசையையொட்டி, பென்னாகரம் போக்குவரத்து கிளை பணிமனையில் இருந்து கூடுதல் சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டன.

**கிருஷ்ணகிரியில்...**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி அணை, காவேரிப்பட்டணம் மற்றும் பெண்ணேஸ்வரமடம் அருகே தென்பெண்ணை ஆற்றில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் எள்ளும், தண்ணீரும் இரைத்து தர்ப்பணம் செய்து முன்னோர்களை வழிபட்டு புனித நீராடினர்.

சிலர் இல்லங்களில் முன்னோர்களுக்கு படைத்து பசுமாட்டுக்கு அகத்திக்கீரை, பழங்கள், பச்சரிசி கலந்த உணவை வழங்கி வழிபட்டனர்.

**ஒசூரில்...**

ஒசூர் தேர்ப்பேட்டையில் உள்ள பச்சைக் குளத்தில் ஏராளமானோர் முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்தனர்.

**ஊத்தங்கரையில்...**

ஊத்தங்கரையை அடுத்த அனுமன் தீர்த்தம் தென்பெண்ணை ஆற்றங்கரையோரத்தில் உள்ள புகழ்பெற்ற அனுமந்தீஸ்வரர் ஆலயத்தில், சுற்றுவட்டாரப் பகுதி மக்கள், தருமபுரி, ஊத்தங்கரை, அரூர், சிங்காரப்பேட்டை உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வந்த ஏராளமானோர் முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்து அனுமந்தீஸ்வரரை வழிபட்டனர்.

## சீராக குடிநீர் விநியோகிக்கக் கோரி பொதுமக்கள் சாலை மறியல்



செக்கோடி கிராமத்தில் சாலை மறியலில் ஈடுபட்ட பொதுமக்கள்.

**தருமபுரி, அக். 10:** பாப்பாரப்பட்டி அருகே செக்கோடி சமத்துவபுரத்தில் சீராக குடிநீர் விநியோகிக்கக் கோரி, அப்பகுதி மக்கள் சாலை மறியலில் சனிக்கிழமை ஈடுபட்டனர்.

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு ஒன்றியம், செல்லியம்பட்டி ஊராட்சிக்கு உள்பட்டது செக்கோடி கிராமம். இங்குள்ள சமத்துவபுரத்தில் சுமார் 100-க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். இந்த குடியிருப்புப் பகுதிக்கு இதுவரை ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் விநியோகிக்கவில்லையாம்.

காந்தி ஜெயந்தி அன்று நடைபெற்ற சிறப்பு கிராம சபைக் கூட்டத்தின்போது, தங்கள் குடியிருப்புப் பகுதிக்கு ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் வழங்கக் கோரி மனு அளித்தும், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையாம்.

இந்நிலையில், அப்பகுதி மக்கள் காலிக் குடங்களுடன் தருமபுரி - பாப்பாரப்பட்டி சாலையில் மறியலில் சனிக்கிழமை ஈடுபட்டனர்.

தகவல் அறிந்த பாலக்கோடு வட்டார வளர்ச்சி அலுவலர் லோகநாதன், பாப்பாரப்பட்டி போலீஸார் ஆகியோர் நேரில் சென்று கிராம மக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். அதில், குடிநீர் பிரச்னைக்கு தீர்வுகாண உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என ஊராட்சி செயலர் உறுதி அளித்ததைத் தொடர்ந்து, கிராம மக்கள் மறியலைக் கைவிட்டனர். இந்த சாலை மறியலால் அப்பகுதியில் சுமார் 1 மணிநேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

## புரட்டாசி சனிக்கிழமை: பெருமாள் கோயில்களில் சிறப்பு வழிபாடு




சிறப்பு அலங்காரத்தில் சோகத்தூர் திம்மராய பெருமாள். (வலது) சிறப்பு அலங்காரத்தில் தீர்த்தமலை தீர்த்தகிரீஸ்வரர்.

**தருமபுரி, அக். 10:** புரட்டாசி சனிக்கிழமையையொட்டி பெருமாள், ஆஞ்சனேயர் கோயில்களில் சிறப்பு பூஜை மற்றும் வழிபாடு நடைபெற்றது.

தருமபுரி கோட்டை பரவாசுதேவ பெருமாள், கடைவீதி பிரசன்ன வெங்கட்டரமண சுவாமி, அதியமான் கோட்டை சென்றாய பெருமாள், சோகத்தூர் திம்மராய பெருமாள், இலக்கியம்பட்டி நித்ய கல்யாண வெங்கடேச பெருமாள், பழைய தருமபுரி வரதகுப்பம் வெங்கட்ரமண சுவாமி, ஆட்டுக்காரம்பட்டி ராதே கிருஷ்ணா பிருந்தாவனம், மூக்கனூர் மலையடிவாரம் ஆதிமூல வெங்கட்ரமண சுவாமி, ராஜாபேட்டை பெருமாள், பென்னாகரத்தை அடுத்த அளேபுரம் லட்சுமி நரசிம்மர் உள்பட மாவட்டத்தில் உள்ள பெருமாள் கோயில்களிலும், தருமபுரி எஸ்.வி. சாலை அபய ஆஞ்சனேயர், முத்தம்பட்டி ஆஞ்சனேயர், தொப்பூர் கணவாய் ஜெயவீர ஆஞ்சனேயர் உள்ளிட்ட ஆஞ்சனேயர் கோயில்களிலும் சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. இதில், அந்தந்த பகுதி மக்கள் பங்கேற்று வழிபட்டனர்.

**அரூரில்...**

அரூரை அடுத்த தீர்த்தமலையில் உள்ள எமன் தீர்த்தம் கோயிலில் சிறப்பு அலங்காரத்தில் தீர்த்தகிரீஸ்வரர் பக்தர்களுக்கு காட்சியளித்தார். இதில் ஏராளமான பக்தர்கள் பங்கேற்று சுவாமியை தரிசனம் செய்தனர். கோயில் நிர்வாகம் சார்பில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

## இடதுசாரி தலைவர்கள் கைதுக்கு எதிர்ப்பு: தருமபுரியில் ஆர்ப்பாட்டம்

**தருமபுரி அக். 10:** தில்லியில் நடைபெற்ற போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தும், போராட்டத்தில் ஈடுபட்ட இடதுசாரி கட்சித் தலைவர்களை கைது செய்ததைக் கண்டித்தும் தருமபுரியில் இடதுசாரிகள் கட்சிகள் சார்பில் சனிக்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை பதவிநீக்கம் செய்யக் கோரி, தில்லியில் கரப்பான்பூச்சி ஜனதா கட்சி சார்பில் ஜந்தர் மந்தரில் சனிக்கிழமை போராட்டம் நடைபெற்றது. இதில், பாஜகவுக்கு எதிரான அரசியல் கட்சிகள், மாணவர், இளைஞர் அமைப்புகள் பங்கேற்றன.

இந்தப் போராட்டத்தில் பங்கேற்க சென்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய பொதுச் செயலாளர் எம்.ஏ.பேபி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா மற்றும் சிபிஐ (எம்.எல்.) தலைவர்கள் உள்ளிட்டோரை தில்லி காவல் துறையினர் கைது செய்தனர். இந்த கைது சம்பவத்தைக் கண்டித்து, இடதுசாரி கட்சிகள் சார்பில் தருமபுரியில் சனிக்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் இரா.சிசுபாலன் தலைமை வகித்தார். மாநிலக் குழு உறுப்பினர் ஏ.குமார், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் எஸ்.கலைச்செல்வம், ஒன்றியச் செயலாளர் வி.பி.சாமிநாதன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் மாவட்டச் செயலாளர் கே.கோவிந்தராஜ், மாநிலக் குழு உறுப்பினர் சி.முருகன் ஆகியோர் பேசினர்.

## 'வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க திமுகவினர் களப் பணியாற்ற வேண்டும்'

**அரூர், அக். 10:** வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க திமுகவினர் களப் பணியாற்ற வேண்டும் என மேற்கு மாவட்டச் செயலாளர் பி.பழனியப்பன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:

திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க, எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வழிகாட்டுதல்படி, திமுக நிர்வாகிகள் அனைவரும் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், திருத்தம், முகவரி மாற்றம், எஸ்ஐஆர்-இல் விடுபட்ட வாக்காளர்களின் பெயர்களை சேர்க்க களப் பணியாற்ற வேண்டும்.

அனைத்து வாக்குப் பதிவு மையங்களிலும் ஞாயிற்றுக்கிழமை (அக். 11) சிறப்பு முகாம் நடைபெறுகிறது. இந்த முகாமில் வாக்குச்சாவடி முகவர்கள் தவறாமல் பங்கேற்க வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 'வரையறுக்கப்பட்ட காலமுறை ஊதியம் வழங்க வேண்டும்'

**கிருஷ்ணகிரி, அக். 10:** வரையறுக்கப்பட்ட காலமுறை ஊதியம் வழங்க வேண்டும் என தமிழ்நாடு வருவாய் கிராம ஊழியர் சங்கத்தினர் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.

கிருஷ்ணகிரியில் தமிழ்நாடு வருவாய் கிராம ஊழியர் சங்க மாவட்டக் கூட்டம் சனிக்கிழமை நடைபெற்றது. இந்த கூட்டத்துக்கு அந்த அமைப்பின் மாவட்டத் தலைவர் சின்னசாமி தலைமை வகித்தார். மாநில செயற்குழு உறுப்பினர்கள் கலைவாணன், ஆறுமுகம், மாவட்ட மகளிர் அணி நிர்வாகி விஜயலட்சுமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இதில், வருவாய் கிராம ஊழியர்களுக்கு வரையறுக்கப்பட்ட காலமுறை ஊதியம் வழங்க வேண்டும். 2004-க்கு பின்னர் பணியில் சேர்ந்த ஊழியர்களுக்கு பிடித்தம் செய்யப்பட்ட சிபிஎஸ் தொகையை திரும்ப வழங்க வேண்டும். மாவட்டத்தில் 2025-ஆம் ஆண்டுக்கான பதவி உயர்வை குறித்த காலத்தில் வழங்க வேண்டும். வருவாய் கிராம ஊழியர்கள், அரசு ஊழியர் பட்டியலில் பிரிவு டி-இல் இணைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.


சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா
सेन्ट्रल बैंक ऑफ़ इंडिया
Central Bank of India
CENTRAL TO YOU SINCE 1911
மண்டல அலுவலகம் : 14/15, வெரைட்டி ஹால் ரோடு, கோவை - 641 001

அடையாள சுவாதீனம் அடிப்படையில் மாபெரும் மின்னணு ஏல அறிவிப்பு (E-Auction Notice) (SARFAESI சட்டம் 2002-ன் கீழ்)

SARFAESI சட்டம் 2002, மற்றும் அதன் பிரிவு 13 (4) ன் கீழ் அதிகாரம் பெற்ற சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா வங்கி அதிகாரி பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் சொத்துக்களை கீழ்க்கண்ட தேதிகளில் அடையாள சுவாதீனம் எடுத்திருந்தார். இதனைத்தொடர்ந்து கீழ்க்கண்ட தேதிகளில் மேற்கண்ட சட்டத்தின் பிரிவு 13(2)ன் கீழ் பின்வரும் கடன் கணக்குகளில் கீழ்க்கண்டவாறு விவரிக்கப்பட்டுள்ள வங்கிக்கு வர வேண்டிய கடன் நிலுவைத் தொகைகளை வட்டியுடன் வசூலிக்கும் விதமாக பட்டியலில் கண்டுள்ள சொத்துக்களை விற்பனை செய்யும் உரிமையுடன் கூடிய கேட்பு அறிவிப்பினை அனுப்பியிருந்தார். ஆனால் கடன்தாரர் / உத்தரவாதம் அளித்தவர் / அடமானம் வைத்தவர் கடன் நிலுவைத் தொகைகளை திருப்பிச் செலுத்த தவறியதால், இதன்கீழ் கையொப்பமிட்ட அதிகாரி மேலே குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவு 13 (4) (a) மற்றும் விதி 8 மற்றும் 9 ன் கீழ், தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழ்க்கண்ட சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் வங்கிக்கு வர வேண்டிய நிலுவைத் தொகைகளை வசூல் செய்திட உள்ளார். இதன்கீழ் கையொப்பமிட்ட அதிகாரியின் மூலமாக https://baanknet.com என்ற இணையதளத்தின் வாயிலாக மின்னணு ஏல முறையில் விற்பனை நடைபெறும்.

**கிளை : ஒசூர் கிளை. கடன் கணக்கின் பெயர் : கடன் பெற்றவர் : M/s.அபிஷேக் இன்டஸ்ட்ரீஸ், உரிமையாளர்: திருமதி.கனிமொழி, க/பெ.மோகன்ராஜ்,** பிளாட் எண்.A3, சிட்கோ ஃபேஸ் 1, சிப்காட், ஒசூர் 635126. **தற்போதைய முகவரி : திருமதி.கனிமொழி, க/பெ.மோகன்ராஜ்,** 108, உள்ளியாளம் கிராமம், பாகலூர் மெயின் ரோடு, ஒசூர் - 635103. **கடன் நிலுவைத் தொகை : 07.10.2026 வரையில் ரூ.5,61,44,266.69 மற்றும் வட்டி, ஏனைய கட்டணங்கள் சேர்த்து. கேட்பு அறிவிப்பு தேதி : 01.10.2021. அடையாள சுவாதீனம் எடுக்கப்பட்ட தேதி : 18.08.2026. சொத்து விபரம் :** 14.41 சென்ட் அல்லது 6283.00 சதுரடி விஸ்தீரணம் உள்ள நிலம் மற்றும் தொழிற்சாலை கட்டிடம் சகிதமான சொத்து பின்வருமாறு அமைந்துள்ளது. பிளாட் எண்.16, S.No. 597 பாகம், புதிய சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், ஸ்ரீ நகர், எலக்ட்ரிக்கல் & எலக்ட்ரானிக்ஸ் இன்டஸ்ட்ரியல் எஸ்டேட் அருகில், ஒசூர் நகர முனிசிபல் கார்ப்பரேஷன், கிருஷ்ணகிரி மாவட்டம் 635109. சொத்தின் எல்லைகள் : வடக்கில் 12 மீட்டர் சிட்கோ சாலை, தெற்கில் சிட்கோ CP நிலம், கிழக்கில் பிளாட் எண்.21, மேற்கில் 9 மீட்டர் சாலை. **M/s.அபிஷேக் இன்டஸ்ட்ரீஸ் நிறுவனத்திற்கு சொந்தமான சொத்து. காப்பு விலை : ரூ.3,46,50,000.00. முன்வைப்புத் தொகை : ரூ.34,65,000/-. ஏலம் உயர்த்திக்கோரும் தொகை : ரூ.1,00,000/-. . ஏலம் நடைபெறும் தேதி : 28.10.2026. ஏலம் நடைபெறும் நேரம் : காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை 10 நிமிட கால நீட்டிப்புடன் .** சொத்தினை பார்வையிடும் தேதி : **அனைத்து வேலை நாட்களிலும் 21.10.2026 முதல் 27.10.2026 தேதி வரையில் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரையில் கிளை மேலாளரின் முன் அனுமதி பெற்று பார்வையிடலாம். முன்வைப்புத் தொகை செலுத்த கடைசி தேதி : 28.10.2026 மதியம் 1.00 மணி வரை. சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, ஒசூர் கிளை, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி / முதன்மை மேலாளர் : Mob No : 8489903009**

**கிளை : ஒசூர் கிளை. கடன் கணக்கின் பெயர் : கடன் பெற்றவர் : திரு.S.S.லட்சுமிபதி, த/பெ.திரு.S.V.ஸ்ரீநிவாசலு,** பிளாட் எண்.2, ஜெயலட்சுமி நிலையம், அம்மன் நகர், தின்னூர், ஒசூர் - 635109. **இணைந்து கடன் பெற்றவர் : திரு.S.V.ஸ்ரீநிவாசலு, த/பெ.வெங்கடசுவாமி,** 2/127, H.செட்டிப்பள்ளி கிராமம், J.கருப்பள்ளி அஞ்சல், ஒசபுரம் தரஃப், தேன்கனிக்கோட்டை தாலுக்கா, கிருஷ்ணகிரி மாவட்டம் - 635109. **கடன் நிலுவைத் தொகை : 07.10.2026 வரையில் ரூ.4,36,72,643.00 மற்றும் வட்டி, ஏனைய கட்டணங்கள் சேர்த்து. கேட்பு அறிவிப்பு தேதி : 17.02.2026. அடையாள சுவாதீனம் எடுக்கப்பட்ட தேதி : 16.07.2026. சொத்து விபரம் :** 1308 சதுரடி விஸ்தீரணம் அளவுள்ள குடியிருப்பு கட்டிட சொத்தானது பின்வருமாறு அமைந்துள்ளது. சர்வே எண்.712 மற்றும் புதிய சப்டிவிஷன் எண்.712/4H பாகம், பிளாட் எண்.2 (கிழக்கு பாகம்), ஜெயலட்சுமி நிலையம், 6வது கிராஸ், அம்மன் நகர், தேன்கனிக்கோட்டை சாலை, மதிகிரி கிராமம் மற்றும் பஞ்சாயத்து, ஒசூர் தாலுக்கா, கிருஷ்ணகிரி மாவட்டம் - 635109. சொத்தின் எல்லைகள் : வடக்கில் S.F.No.712 பாகம், தெற்கில் 30 அடி லேஅவுட் சாலை, கிழக்கில் வர்த்தக மனையிடம், மேற்கில் திருமதி.லட்சுமிதேவி அவர்களின் பிளாட் எண்.2 (பாகம்). **திரு.S.S.லட்சுமிபதி, த/பெ.திரு.S.V.ஸ்ரீநிவாசலு அவர்களுக்கு சொந்தமான சொத்து. காப்பு விலை : ரூ.1,25,50,000.00. முன்வைப்புத் தொகை : ரூ.12,55,000/-. ஏலம் உயர்த்திக்கோரும் தொகை : ரூ.1,00,000/-. ஏலம் நடைபெறும் தேதி : 28.10.2026. ஏலம் நடைபெறும் நேரம் : காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை 10 நிமிட கால நீட்டிப்புடன் .** சொத்தினை பார்வையிடும் தேதி : **அனைத்து வேலை நாட்களிலும் 21.10.2026 முதல் 27.10.2026 தேதி வரையில் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரையில் கிளை மேலாளரின் முன் அனுமதி பெற்று பார்வையிடலாம். முன்வைப்புத் தொகை செலுத்த கடைசி தேதி : 28.10.2026 மதியம் 1.00 மணி வரை. சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, ஒசூர் கிளை, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி / முதன்மை மேலாளர் : Mob No : 8489903009**

**நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் : 1.** ஏல விற்பனை ஆன்லைன் மின்னணு ஏலம் / ஏலம் கோருதல் என்ற முறையில் **https://baanknet.com** என்ற இணையதளத்தின் வாயிலாக மேற்குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்தில் (ஏலம் முடிவுக்கு வரும் வரையில் 10 நிமிடம் கால நீட்டிப்புடன்) நடைபெறும். **2.** ஏல விண்ணப்பங்களை ஆன்லைன் முறையில் **28.10.2026,** மதியம் **1.00** மணி அளவிலோ அல்லது அதற்கு முன்பாகவோ சமர்ப்பிக்க வேண்டும். **3.**மின்னணு ஏல விற்பனையானது **"எப்படி எங்கு உள்ளனவோ அதே நிலையில்"** என்ற அடிப்படையில் நடைபெறும். **4.** விருப்பமுள்ள ஏலதாரர்கள் மின்னணு ஏல நடவடிக்கைகளில் கலந்து கொள்ளுதல் மற்றும் ஏல விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் ஆகியவற்றுக்கு முன்பாக **https://baanknet.com** என்ற இணையதளத்திற்கு சென்று முழு விபரங்களுடன் கூடிய நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை அறிந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். **5.** வெற்றிபெற்ற ஏலதாரர் / சொத்தினை வாங்குபவர், வருமான வரிச் சட்டம் 1961-ன் உட்பிரிவு 194 IAன் பிரகாரம் ரூ.50.00 லட்சம் மற்றும் அதற்கு மேலான மதிப்பினை உடைய அசையாச் சொத்துக்களின் விற்பனை நடைமுறைகளில் 1% TDS தொகையினை செலுத்த வேண்டும். இத்தொகையினை படிவம் 26QB ல் சலான் (Challan) பூர்த்தி செய்து செலுத்தியதன் பின்னர் அதற்கான TDS சான்றிதழின் அசல் இரசீதினை வங்கியில் சமர்ப்பிக்க வேண்டும். **6.** மேலும் சொத்து தொடர்பான விபரங்களை அறிய **சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, ஒசூர், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி / முதன்மை மேலாளர் : Mob No : 8489903009, முதன்மை மேலாளர் (RO) : Mob No : 8489903057, சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா, மண்டல அலுவலகம், கோயம்புத்தூர், மின்னஞ்சல் முகவரி :recvcoimro@centralbank.co.in,** அவர்களை அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும். ஏலதாரர் மேற்கண்ட இணையதளத்தில் பதிவு செய்து கொண்ட பின்னர், விருப்பமுள்ள ஏலதாரர் / சொத்தினை வாங்குபவர் பின்வரும் ஆவணங்களை ஏல விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும் கடைசி தேதிக்கு முன்பாக இணைய தளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். 1) NEFT/RTGS சலான் ஆகியவற்றின் நகல், 2) PAN கார்டு நகல், 3) அடையாளச் சான்று (KYC) சுய சான்றளிக்கப்பட்ட வாக்காளர் அடையாள அட்டை / ஓட்டுனர் உரிமம் / பாஸ்போர்ட், 4) முகவரிச் சான்று, மேற்கண்ட ஆவணங்களை பதிவேற்றம் செய்யாவிடில் ஏல விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதை அறியவும்.

**தேதி : 07.10.2026**
**இடம் : ஒசூர்**

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
**சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா**



சிவானந்த சரஸ்வதி சேவாஸ்ரம்

தீபாவளிக்கு உதவுங்கள்





சிவானந்த குருகுலம்
ஆதரவற்ற குழந்தைகள் மற்றும் முதியோர் இல்லம் 1945 முதல்

சிவானந்த குருகுலத்தின் குழந்தைகளும் முதியோரும் இந்த ஆண்டு தீபாவளியைக் கொண்டாட உதவுங்கள். உங்களால் இயன்றதைப் பகிருங்கள் — புத்தாடைகள், இனிப்புகள், குளியல் எண்ணெய், அரிசி, கோதுமை, பிற உணவுத் தானியங்கள், சுற்றுச்சூழலுக்கு உகந்த பட்டாசுகள். நன்றி.

ஆன்லைன் பங்களிப்பு
PayTM, Google Pay, PhonePe, BHIM, Amazon Pay உள்ளிட்ட அனைத்து UPI செயலிகள் மூலமாக அளிக்கலாம்.

எங்கள் UPI ஐடி
BuildHope@HDFCbank

காசோலை / வரைவோலை மூலம்
பெறுநர் பெயர்: SIVANANDA SARASWATHI SEVASHRAM
அனுப்ப வேண்டிய முகவரி:
சிவானந்த குருகுலம் (நிர்வாக அலுவலகம்)
புதிய எண். 4, பழைய எண். 20, கம்பர் தெரு,
கிழக்கு தாம்பரம், சென்னை 600 059.

பங்களிக்க மேலும் வழிகள்
கிரெடிட் / டெபிட் கார்டு • நெட் பேங்கிங் • NEFT / RTGS / IMPS
www.BuildHope.org/donate • info@BuildHope.org
வருமான வரிச் சட்ட விதிகளின்படி வரிவிலக்கு உண்டு



**SU டோல் ரோடு பிரைவேட் லிமிடெட்**
(கார்ப்பரேட் இன்சால்வென்சி தீர்வு செயல்முறையின் கீழ்)
CIN: U74999MH2007PTC169145
பதிவு அலுவலகம்: ரிலையன்ஸ் சென்டர், 19 வால்சந்த் ஹிராசந்த் மார்க், பலார்ட் எஸ்டேட், மும்பை - 400 001

**டெண்டர் அறிவிப்பு**

**11.10.2026 தேதியிட்ட ஏலப்புள்ளியுடன் முன்மொழிவு கோரிக்கை வரவேற்பு அறிவிப்பு:-**

**திட்டப்பணியின் பெயர்:-** NHDP கட்டம் III-A-இன் கீழ், 'கட்டுதல், இயக்குதல் மற்றும் ஒப்படைத்தல்' (BOT) அடிப்படையில், தமிழ்நாடு மாநிலத்தில் NH-68 (புதிய NH-79)-இன் சேலம் - உளுந்தூர்பேட்டை பிரிவு 0.313 கி.மீ முதல் 136.670 கி.மீ வரை). பல்வேறு தூரப்புள்ளிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய சீரான கால இடைவெளியிலான மேலடுக்கு அமைக்கும் அவசரப் பணி.

பயனர்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டும், சீரான போக்குவரத்து ஓட்டத்தை உறுதி செய்யும் வகையிலும் இப்பகுதியைப் பராமரிக்க உடனடியாகப் பணிகளைத் தொடங்க ஒப்பந்ததாரருக்கு இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் அறிவுறுத்தியுள்ளது. பொதுமக்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு, கடன் வழங்குநர்கள் குழுவின் ஒப்புதலுடன், ஒப்பந்த உடன்படிக்கையின்படி இந்த மேலடுக்கு அமைக்கும் பணியை மேற்கொள்ள கலைப்பு அலுவலர் முடிவு செய்துள்ளார். NHAI-இல் பதிவு செய்துள்ளவர்களும் உரிய தரநிலைகொண்டவர்களும் தகுதியும் அனுபவமும் வாய்ந்தவர்களுமான ஒப்பந்ததாரர்களிடமிருந்து (NHAI-ஆல் தடைப்பட்டியலில் சேர்க்கப்பட்டவர்கள் அல்லது குறிப்பிட்ட காலத்திற்குத் தடை செய்யப்பட்டவர்கள் அல்லது NHAI-இன் அத்தகைய நடவடிக்கை நிலுவையில் உள்ள நிறுவனங்கள் நீங்கலாக) பின்வரும் பணிக்கான ஏலப்புள்ளியுடன் கூடிய முன்மொழிவு கோரிக்கையை கலைப்பு அலுவலர் இதன் மூலம் அழைக்கிறார்.

திட்டப்பணியின் சுருக்கமான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| வ. எண் | பிரிவு | NH- எண் | நீளம் (கி.மீ-இல்) | மாநிலம் | மதிப்பீட்டு செலவு |
|---|---|---|---|---|---|
| 1. | சேலம் - உளுந்தூர்பேட்டை பிரிவு - பல்வேறு தூரப்புள்ளிகளில் சீரான கால இடைவெளியிலான மேலடுக்கு அமைக்கும் அவசரப் பணி | NH-68 (புதிய எண் NH-79) | 61.48 (கட்டம் II) | தமிழ்நாடு | ரூ.113.75 கோடி (GST உட்பட) |

பணியின் தன்மை குறித்த கூடுதல் விரிவான தகவல்களை ஏல ஆவணத்தில் காணலாம். cirp.sutollroad@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியில் ஏலதாரரிடமிருந்து கோரிக்கை பெறப்பட்டதும், முழுமையான ஏல ஆவணம் வழங்கப்படும். ஏலப்புள்ளி சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் **10 நவம்பர் 2026, (IST) 17.00 மணிவரை (ஏலத்துக்கான கடைசி நாள்)** . தொழில்நுட்ப ஏலப்புள்ளிகள் திறக்கப்படும் நாள்: **11 நவம்பர் 2026 நேரம்: 11:30 மணி** இடம்: 2-வது தளம், ஹரி க்ருபா, 71/1, மெக்நிக்கோலஸ் சாலை (பூந்தமல்லி நெடுஞ்சாலைக்கு அருகில்), சேத்துப்பட்டு, சென்னை - 600 031. எந்தவொரு காரணத்தையும் குறிப்பிடாமல், ஏலப்புள்ளிகள் அனைத்தையுமோ அல்லது ஏதேனும் ஒன்றையோ ஏற்றுக்கொள்வதற்கோ அல்லது நிராகரிப்பதற்கோ கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு உரிமை உண்டு.

**குறிப்பு:** பணிகளைத் தொடங்குவதற்கான ஆயத்தக் காலம் - 30 நாள்கள். பணியை நிறைவு செய்வதற்கான மதிப்பீட்டுக் காலம் 240 நாள்கள் (ஆயத்தக் காலத்தையும் சேர்த்து).

தொழில்நுட்ப ரீதியான விளக்கங்களுக்கு,
திரு. செந்தில் குமரன் +91 98657 11337 அவர்களைத் தொடர்பு கொள்ளவும்.
பிற விளக்கங்களுக்கு, திரு. வெங்கட் +91 8807416144 அவர்களைத் தொடர்பு கொள்ளவும்.

**S.ராஜேந்திரன், ரெசல்யூஷன் புரொஃபஷனல்**
**SU டோல் ரோடு பிரைவேட் லிமிடெட் விவகாரம் தொடர்பானது**
**IBBI பதிவு எண்: IBBI/IPA-002/IP-N00098/2017-18/10241.**
**பணி ஒப்படைப்புக்கான அங்கீகாரம் 31 டிசம்பர் 2026 வரை செல்லுபடியாகும்.**
மின்னஞ்சல்: cirp.sutollroad@gmail.com
முகவரி: 2-வது தளம், ஹரி க்ருபா, 71/1, மெக்நிக்கோலஸ் சாலை (பூந்தமல்லி நெடுஞ்சாலைக்கு அருகில்), சேத்துப்பட்டு , சென்னை - 600 031.





உடனடிச் செய்திகள் சூடாக சுருக்கமாக...
www.dinamani.com